**Code No. 006**

**PRE-BOARD EXAMINATION-1, DECEMBER – 2019**

**CLASS: X** **TAMIL-2nd LANGUAGE** **Time: 3 hours**

**MAX. MARKS: 80**

---

***பிரிவு : அ - படித்தல்*** - 15

***பிரிவு : ஆ -எழுதுதல்*** - 14

***பிரிவு : இ -இலக்கணம்*** - 15

***பிரிவு : ஈ -இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்*** - 36

**பகுதி - அ (படித்தல்)**

1. **பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** 5

வீடு, அலுவலகம் என அனைத்து வகை கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பை போல சூரியமின் சக்தியை உற்பத்தி செய்யவும் அரசு ஊக்குவித்து வருகிறது. சோலார் பேனல்களை நிறுவுவதற்கு மானியங்களையும் அளித்துவருகிறது.

- சோலார் பேனல்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் முறைக்கு ‘போட்டோ வோல்டாய்க்’ என்று பெயர். இம்முறையில் ஒளி மின் விளைவை (போட்டோ எலக்ட்ரிக்) பயன்படுத்தி சூரிய ஒளி மின் சக்தியாக மாற்றப்படுகிறது. இதற்காக சோலார் பேனல்களில் செலினியம் பூசப்படுகிறது.
- எனவே அதன்மீது சூரிய ஒளி விழும்போது, மின்னணுக்கள் தூண்டப்பட்டு, மின்சாரமாகிறது. நேர்மின்சக்தியாக இருக்கும் அம்மின்சாரத்தை இன்வெர்ட்டர்களைக் கொண்டு ஏ.சி. மின்சாரமாக மாற்றி வீடுகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பகலில் கிடைக்கும் மின்சாரத்தை பாட்டரிகளில் சேமித்து, அதை இரவு நேரங்களிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். தேவைக்குத் தகுந்தபடி பாட்டரிகளைக் கூடுதலாகவும் இணைத்துக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு 10 யூனிட் மின்சாரம் பெறுவதற்கு, 10 யூனிட் சோலார் செல் பேனலோடு 5 அல்லது 10 ஆம்பியர் மின்சார பாட்டரி தேவை.
- இம்முறையில் குறைந்த அளவில்தான் மின்சாரம் தயாரிக்க முடியும். அதை வீட்டின் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் சூரிய ஒளியிலிருந்து இன்னும் நம்மால் அதிகளவில் மின்சக்தியைப் பெற முடியும். நீர், காற்று ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் மின்சக்தியைக் காட்டிலும் கூடுதலாகவும் பெறமுடியும்.

**வினாக்கள்** :

i. சோலார் பேனல்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் முறைக்கு ______________ என்று பெயர்?

(அ) போட்டோ வோல்டாய்க் (ஆ) போட்டோ

(இ) மின்சக்தி (ஈ) இணையம்

ii. ஒரு நாளைக்கு 10 யூனிட் மின்சாரம் பெறுவதற்கு, 10 யூனிட் சோலார் செல் பேனலோடு ______________ ஆம்பியர் மின்சார பாட்டரி தேவை.

(அ) 6 அல்லது 12 (ஆ)15 அல்லது 10

(இ) 5 அல்லது 10 (ஈ) 10 அல்லது 10

iii. சூரிய ஒளி மின் சக்தியாக மாற்ற சோலார் பேனல்களில் _________ பூசப்படுகிறது?

(அ) முலாம் (ஆ) செலினியம்

(இ) வண்ணம் (ஈ) தாமிரம்

iv. நீர், காற்று ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் மின்சக்தியைக் காட்டிலும் சோலார் பேனல்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை நாம் எவ்வளவு பெறமுடியும்?

(அ) குறைவாக (ஆ) மிதமாக

(இ) கூடுதலாக (ஈ) கணிசமாக

v. இன்றைய சூழ்நிலையில் சோலார் பேனல்களை பயன்படுத்துவது?

(அ) சரியானது (ஆ) தேவையற்றது

(இ) தவறானது (ஈ) எதுவும் இல்லை

2. **பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** 5

ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் பதினெட்டாவது இடத்தில் தமிழ் மொழி உள்ளது. இணையத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் இந்திய மொழிகளில் தமிழ் முதன்மையாக உள்ளதாக 2017 ஆவது ஆண்டில் நடைபெற்ற கூகுள் கணக்கெடுப்பில் தெரிய வந்தது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ் மொழி, தற்போது வழக்கில் இருக்கும் ஒரு சில செம்மொழிகளில் ஒன்றாகும்.

பழங்கால இலக்கிய நடை கூட, இன்றைய மக்களால் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளது. எடுத்துக்காட்டாக, பள்ளிக் குழந்தைகள் சிறுவயதில் கற்கும் அகர வரிசையான ஆத்திசூடி 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்டது. திருக்குறள் ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது.

இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் மிக நீண்ட இலக்கிய, இலக்கண மரபுகளைக் கொண்டது. தமிழ் இலக்கியங்களில் சில 2500 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை. கண்டெடுக்கப்பட்டுள்ள தமிழ் ஆக்கங்கள் கிறித்துவுக்கு முன் 400ம் ஆண்டைச் சேர்ந்த பிராமி எழுத்துகளில் எழுதப் பெற்றவைகளாகும் இந்தியாவில் கிடைத்துள்ள ஏறத்தாழ 100,000 கல்வெட்டு, தொல்லெழுத்துப் பதிவுகளில் 60,000 த்தி ற்கும் அதிகமானவை தமிழகத்தில் கிடைத்துள்ளன. இதில் ஏறத்தாழ 95 விழுக்காடு தமிழில் உள்ளன; மற்ற மொழிகள் அனைத்தும் ஐந்து விழுக்காட்டுக்கும் குறைவான கல்வெட்டுகளையே கொண்டுள்ளன. பனையோலைகளில் எழுதப்பட்டு திரும்பத் திரும்பப் படியெடுப்பதன் (பிரதி பண்ணுவது) மூலம் அல்லது வாய்மொழி மூலம் வழி வழியாகப் பாதுகாக்கப்பட்டு

வந்ததால், மிகப் பழைய ஆக்கங்களின் காலங்களைக் கணிப்பது மிகவும் கடினமாக உள்ளது. இன்று கிடைக்கக்கூடிய மிகப் பழைய ஆக்கம் தொல்காப்பியம் ஆகும். இது பண்டைக்காலத் தமிழின் இலக்கணத்தை விளக்கும் ஒரு நூலாகும். இதன் சில பகுதிகள் கி. மு. 400 ஆம் ஆண்டு காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

**வினாக்கள்:**

i. இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் மிக நீண்ட இலக்கிய, இலக்கண மரபுகளைக் கொண்டது ____________________ .
அ. தமிழ் மொழி
ஆ. ஆங்கில மொழி
இ. பிரன்ச் மொழி

ii. இன்று கிடைக்கக்கூடிய மிகப் பழைய ஆக்கம் __________________ ஆகும்.
அ. சிலப்பதிகாரம்
ஆ. தொல்காப்பியம்
இ. திருக்குறள்

iii. தொல்காப்பியம் பண்டைக்காலத் தமிழின் ____________ விளக்கும் ஒரு நூலாகும்.
அ. இலக்கணத்தை
ஆ. இலக்கியத்தை
இ. நாட்டின் வளத்தை

iv. தொல்காப்பியத்தின் சில பகுதிகள் ________________ ஆண்டு காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
அ. கி. மு. 4000
ஆ. கி. மு. 400
இ. கி. மு. 40

v. கண்டெடுக்கப்பட்டுள்ள தமிழ் ஆக்கங்கள் கிறித்துவுக்கு முன் 400ம் ஆண்டைச் சேர்ந்த _______________ எழுதப் பெற்றவைகளாகும்.
அ. கிராமிய எழுத்துகளில்
ஆ. சமஸ்கிருத எழுத்துகளில்
இ. பிராமி எழுத்துகளில்

3. **பின்வரும் பகுதியைப் படித்து, அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.** **5**

விவேகானந்தர் 1863 ஜனவரி 12ஆம் நாள் கல்கத்தாவில் விசுவநாத் தத்தாவுக்கும் புவனேஸ்வரி தேவிக்கும் மகனாகப் பிறந்தார். தாய் மொழி வங்காளம். சிறு வயதிலேயே மிகுந்த நினைவாற்றல் கொண்டவராகவும் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார். இசையும், இசை வாத்தியங்களும் பயின்றார். இள வயது முதலே தியானம் பழகினார். பகுத்தறிவாளராகவும் திகழ்ந்தார்.

பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் 1879 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள மாநிலக் கல்லூரியில் (*Presidency College*) சேர்ந்தார். பின்னர் ஸ்காட்டிஷ் சர்ச்சு கல்லூரியில் (*Scottish Church College*) தத்துவம் பயின்றார். அங்கே மேல்நாட்டு தத்துவங்கள், மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வரலாறு முதலியவற்றை படித்தறிந்தார். சுவாமி விவேகானந்தருக்கு மகேந்திரநாத் தத்தர் மற்றும் பூபேந்திரநாத் தத்தர் எனும் இரு இளைய சகோதரர்களும், மூத்த, இளைய சகோதரிகளும் இருந்தனர். பூபேந்திரநாத் தத்தர் இந்திய சுதந்திரத்திற்குப் போராடியவர்.

இறை உண்மைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, இராமகிருஷ்ணரைப் பற்றி கேள்விப்பட்டு அவரிடம் சென்றார் விவேகானந்தர். இராமகிருஷ்ணரை முதன் முதலாக விவேகானந்தர் சந்தித்த ஆண்டு 1881. எதையும் பகுத்தறிந்து ஏற்றுக் கொள்ளும் விவேகானந்தரால் முதலில் இராமகிருஷ்ணரின் இறைவனைப் பற்றிய கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறைவழிபாட்டையும் உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இராமகிருஷ்ணரின் போதனைகள், உருவ வழிபாடு, அல்லது அருவ வழிபாடு என்று ஒரே தனி வழியினை போதிக்காமல், இரண்டு வழிகளிலும் இருக்கும் உண்மையை உணர்த்துவதாக இருந்தன. இராமகிருஷ்ணரின் ஈடுபாட்டால், விவேகானந்தரால், பக்தி மார்க்கம், மற்றும் ஞான மார்க்கம், இரண்டின் அவசியத்தினையும் புரிந்து கொள்ள முடிந்தது. 1886 ஆம் ஆண்டு இராமகிருஷ்ணர் இறந்த பின் விவேகானந்தரும் இராமகிருஷ்ணரின் மற்ற முதன்மை சீடர்களும் துறவிகளாயினர்.

பின்னர் நான்கு ஆண்டுகள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் சுற்றினார் விவேகானந்தர். தன்னுடைய இந்த பயணங்கள் மூலம் இந்தியாவிலுள்ள அனைத்து பகுதிகளின் கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை நிலை போன்றவற்றை அனுபவித்து அறிந்தார் விவேகானந்தர். அச்சமயத்தில் இந்திய மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் கீழானதாக இருந்தது. மேலும், அது இந்தியர் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த காலமாகும். தன் பயண முடிவில் 24 டிசம்பர் 1892 இல் கன்னியாகுமரி சென்ற விவேகானந்தர் அங்கே கடல் நடுவில் அமைந்த ஒரு பாறை மீது மூன்று நாட்கள் தியானம் செய்தார். அந்த மூன்று நாட்கள் இந்தியாவின் கடந்த காலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் குறித்து தியானம் செய்ததாக பின்னர் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றும் அந்தப் பாறை விவேகானந்தர் நினைவிடமாக பராமரிக்கப் பட்டு வருகிறது. தங்கக் குடத்தில் தட்டினால் எழும் கிண்கிணி நாதம் போன்ற இனிமையான குரல் என்று சட்டம்பி சுவாமிகள், சுவாமி விவேகானந்தரது குரல் வளம் குறித்துக் கூறுகின்றார்.

## பகுதி - ஆ (எழுதுதல்)

4. உயர்நிலைப் படிப்பிற்கு பிறகு உயர்க்கல்வி என்ன படிக்கலாம்? எனும் அறிவுரை வேண்டி வெளிநாட்டில் இருக்கும் உன் சகோதரர்களுக்கு கடிதம் ஒன்று எழுதுக. 6

(அல்லது)

நடைபாதைக்கடைகளை நீக்கக்கோரி நகர் மன்ற ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

5. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.** 8

அ) முயற்சியும் உயர்ச்சியும் - முன்னுரை - முயற்சியின் சிறப்பு - முயற்சி திருவினை அக்கம் - முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - முயன்றால் வானம் வசப்படும் - நாட்டு முன்னேற்றம் - முடிவுரை.

(அல்லது)

ஆ) சிக்கன வாழ்வு - முன்னுரை - சிக்கனம் உபயோகத்தன்மை -சிக்கனமாய் வாழ்வது எப்படி? - வரவு செலவு - முன்னேற்றப்பாதை - சமுதாய மேம்பாடு - முடிவுரை.

## பகுதி - இ (இலக்கணம்)

6. **சான்று தருக:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. செய்யுளிசை அளபெடை

அ. உரனசைஇ ஆ. கெடுப்பதூஉம் இ. ஆஅளிய ஈ. உடுப்பதூஉம்

ii. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

அ. செம்மலர் ஆ. முல்லை மலர் இ.வட்டநிலா ஈ. முத்துப்பல்

iii. பொதுமொழி

அ. படித்தான் ஆ. சுவைத்தேன்

இ. சுவையான தேன் ஈ. தை

iv. வினைமுற்றுத் தொடர்

அ. சென்ற கோதை ஆ. நல்ல மாணவன் இ. படித்தான் பாரி

ஈ. கண்ணா வா!

v. தேமாங்காய்

அ. எழுத்தெல்லாம் ஆ. யாதானும் இ. வாழியவே ஈ. வந்தனன்

7. **நிரப்புக**: (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ___________ எனப்படும்.

அ. வழுநிலை ஆ. வழாநிலை இ. கால வழாநிலை

ii. நெய்தல் நிலம் என்பது ______________.

அ. வயலும் வயல் சார்ந்த இடமும்

ஆ. மலையும் மலை சார்ந்த இடமும்

இ. காடும் காடு சார்ந்த இடமும்

iii. வினா _____________ வகைப்படும்.

அ. ஆறு ஆ. ஏழு இ. எட்டு

iv. வெட்சி நிரை கவர்தல் என்பதில் உள்ள நிரை என்பதன் பொருள் ______

அ. பசு ஆ. பசுக்கூட்டம் இ. வரிசை

v. ஓர் ஆண்டின் கூறுகள் ________ எனப்படும்.

அ. மாதம் ஆ. பெரும்பொழுது இ. சிறுபொழுது

8. **கூறியவாறு செய்க:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. படித்தல் (வினையாலனையும் பெயராக மாற்றுக)

அ) படித்தவர் ஆ) படி இ) பாடிய ஈ) பாட்டு

ii. மணற்கேணி (அசை பிரித்து வாய்பாடு கூறு)

அ) நிரை நேர் நேர் - புளிமாங்காய் ஆ) நேர் நேர் நேர் - தேமாங்காய்

இ) நிரை நிரை நேர் - கருவிளங்காய் ஈ) நேர் நிரை நேர் - கூவிளங்காய்

iii. 'மருதம்' - சரியான தொழிலைப் பொருத்துக.

அ. ஏறு தழுவுதல் ஆ. களை எடுத்தல் இ. கிழங்கு அகழ்தல்

ஈ. வழிப்பறி செய்தல்

iv. ஆடுதல் ( தொழிற்பெயர் விகுதியை எழுதுக)

அ. அல் ஆ. தல் இ. ல் ஈ. ஆடல்

v. வேந்தர் (அளவுப் பண்புத்தொகையாக்குக)

அ. வாள்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர் ஈ. சிற்றரசர்

9. **இலக்கணக்குறிப்பு:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. மாமழை

அ. இடைச்சொல் தொடர் ஆ. இடை தொடர்

இ. உரிச்சொல் தொடர் ஈ. எழுவாய்த் தொடர்

ii. பேறு

அ. முதனிலைத் தொழிற்பெயர் ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ. விகுதிபெற்ற தொழிற்பெயர் ஈ. பகுதி

iii. 'அணிகலமும்' - இதன் இலக்கணக்குறிப்பு யாது?

அ. பண்புத்தொகை ஆ. வேற்றுமை

இ. முற்றும்மை ஈ. பெயர்ச்சொல்

iv. கொல்யானை

அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. முற்றும்மை ஈ. உருவகம்

10. **சரியான தொடரைத் தேர்வு செய்க:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. அ. செய்யுளை அழகு படுத்த வருவது சொல் இலக்கணம்.

ஆ செய்யுளை அழகு படுத்த வருவது பொருள் இலக்கணம்

இ. செய்யுளை அழகு படுத்த வருவது அணி இலக்கணம்

ஈ. செய்யுளை அழகு படுத்த வருவது யாப்பு இலக்கணம்

ii. அ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது திணை வழு

ஆ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது பால் வழு

இ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது பால்வழுவமைதி

ஈ. பசுவை என்னம்மை வந்தாள் என்பது திணை வழுவமைதி

iii. காலப்போக்கில் மருவி மாறி வருபவை ___________.

அ. இலக்கணப் போலி ஆ. மரூஉ

இ. எழுத்துப் போலி ஈ.காலப்பெயர்

iv. அ. எயில் காத்தல் கரந்தை

ஆ. எயில் காத்தல் உழிஞை

இ. எயில் காத்தல் தும்பை

ஈ. எயில் காத்தல் நொச்சி

v. அ. நேர் நேர் நேர் - புளிமாங்காய்

ஆ. நேர் நேர் நே - தேமாங்காய்

இ. நேர் நேர் நே - கருவிளங்காய்

ஈ. நேர் நேர் நே - கூவிளங்காய்

<u>**பகுதி - ஈ இலக்கியம் /தமிழ்ப்பாடநூல்**</u>

11. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.** 5

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முக மகிழ்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தவர் கருதுகின்றனர், உறவினர் வேறு; விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

அற உணர்வும் தமிழர் மரபும் திருவள்ளுவர் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே படைத்து உள்ளார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேற்படாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்கிறார்.

**வினாக்கள்:**

i. விருந்தினர் - உறவினர் வேறுபாடு யாது?
ii. விருந்தோம்பல் என்றால் என்ன?
iii. விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியுள்ளது யாது?
iv. திருவள்ளுவர் விருந்தோம்பலை எவ்வாறு வலியுறுத்துகிறார்?
v. எதற்கு இல்லறம் என்கிறார் திருவள்ளுவர்?

12. **பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.** 4

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும் .........

**வினாக்கள்:**

i. இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூலின் பெயர்?
அ. சிலப்பதிகாரம் ஆ. நன்னூல்
இ. முலைப்பாட்டு ஈ. பரிபாடல்

ii. ஊழி என்பதன் பொருள் என்ன?
அ. யுகம் ஆ. உயிர் இ. உயிர்வெளி ஈ. வானம்

iii. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ. கீரந்தையார் ஆ. பாரதியார் இ.கண்ணதாசன் ஈ. கம்பர்

iv. உரு அறிவாரா - என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
அ. பெயரெச்சம் ஆ. முற்றெச்சம் இ. தொழிற்பெயர் ஈ. வினைச்சொல்

13. **பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக:** 2

i. செயற்கை ______________ கடைத்தும் உலகத்து
இயற்கை ________________செயல்.

ii. குற்றம் ________ குடிசெய்து வாழ்வாரை
சுற்றமாய்ச் ___________ உலகு.

14. **எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி:** 8

i. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன யாவை?

ii. கோசல நாட்டின் இயற்கை வளத்தையும் நாட்டு வளத்தையும் குறித்து எழுதுக?

iii. இராசராசன் காக்கும் திருநாட்டின் இயல்புகள் யாவை?

15. **எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி.** 10

i. மொழி பெயர்ப்பின் தொடக்க காலம் குறித்து எழுதுக.

ii. தோற்பாவைக் கூத்து குறித்து எழுதுக?

iii. ம.பொ.சி அவர்கள் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றதற்கு காரணம் என்ன?

16. **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி.** (துணைப்பாடம்)

அ.பாய்ச்சல் - கதைச்சுருக்கம் . 7

(அல்லது)

ஆ. கோபாலபுரத்து மக்களின் விருந்தோம்பல்

~~<><>~~